முதல் திருப்புதல் பொதுத்தேர்வு - 2023

பன்னிரெண்டாம் வகுப்பு

பதிவு எண் :

பொருளியல்

நேரம் : 3.00 மணி | பகுதி - 1 | மதிப்பெண்கள் : 90

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக- 20×1=20

1) கீழ்வருவனவற்றுள் ஓட்ட மாறிலியை கண்டுபிடி
அ) பண அளிப்பு ஆ) சொத்துக்கள்
இ) வருவாய் ஈ) வெளிநாட்டுச் செலாவணி இருப்பு

2) பகிர்வில் சமத்துவத்தை கடைப்பிடிக்கிற பொருளாதார அமைப்பு ______ ஆகும்
அ) முதலாளித்துவ அமைப்பு ஆ) உலகமயத்துவ அமைப்பு
இ) கலப்புப் பொருளாதார அமைப்பு ஈ) சமத்துவ பொருளாதார அமைப்பு

3) இந்தியாவில் நிதி ஆண்டு என்பது
அ) ஏப்ரல் 1 முதல் மார்ச் 31 ஆ) மார்ச் 1 முதல் ஏப்ரல் 30
இ) மார்ச் 1 முதல் மார்ச் 16 ஈ) ஜனவரி 1 முதல் டிசம்பர் 31

4) ஒரு நாட்டின் சராசரி வருமானம் என்பது
அ) தனிநபர் வருமானம் ஆ) தலைவீத வருமானம்
இ) பணவீக்க வீதம் ஈ) செலவிடக்கூடிய வருமானம்

5) மொத்த அளிப்பு சமம்
அ) C+I+G ஆ) C+S+G+(X-M)
இ) C+S+T+(X-M) ஈ) C+S+T+RF

6) மறைமுக வேலையின்மையில் உழைப்பாளியின் இறுதிநிலை உற்பத்தி
அ) பூஜ்யம் ஆ) ஒன்று இ) இரண்டு ஈ) நேர்மறை

7) தொன்மைப் பொருளியல் கோட்பாட்டின் பிரதான இயல்பு ______
அ) குறைந்த அளவு வேலைவாய்ப்பு
ஆ) பொருளாதாரம் எப்போதும் சமநிலையில் இருக்கும்
இ) தேவை அதன் அளிப்பை உருவாக்குகிறது
ஈ) நிறைகுறை போட்டி

8) MPCஐயும் MPSஐயும் கூட்டினால் கிடைப்பது
அ) 1 ஆ) 2 இ) 0.1 ஈ) 1.1

9) பெருக்கியின் மதிப்பு
அ) 1/(1-MPC) ஆ) 1/MPS இ) 1/MPC ஈ) அ மற்றும் ஆ

10) காகிதப் பண முறையை மேலாண்மை செய்வது
அ) மைய பணவியல் அமைப்பு ஆ) மாநில அரசு
இ) மைய அரசு ஈ) வங்கிகள்

11) பணவீக்கத்தின் பொழுது பயனடைபவர்கள் யார்?
அ) கடன் பெற்றோர்கள் ஆ) கடன் வழங்கியோர்
இ) கூலி மற்றும் சம்பளம் பெறுவோர் ஈ) அரசு

Scanned with CamScanner

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

12) பொருத்துக

A) விவசாய மறுநிதி மேம்பாட்டுக் கழகம்	-	i) ஜீலை 1963
B) நபார்டு	-	ii) ஜீலை 1982
C) ஏற்றுமதி - இறக்குமதி வங்கி	-	iii) மார்ச் 1982
D) பணமதிப்பிழப்பு	-	iv) நவம்பர் 2016

	A	B	C	D
அ)	(i)	(ii)	(iii)	(iv)
ஆ)	(iii)	(ii)	(i)	(iv)
இ)	(iv)	(iii)	(ii)	(i)
ஈ)	(ii)	(i)	(iv)	(iii)

13) பன்னாட்டு வாணிகம் உள்நாட்டு வாணிகத்திலிருந்து வேறுபடக் காரணம்
அ) வணிகக் கட்டுப்பாடுகள் ஆ) உற்பத்திக் காரணிகள் இடம் பெயர இயலாமை
இ) நாடுகளின் கொள்கை வேறுபாடுகள் ஈ) மேற்சொன்ன அனைத்தும்

14) புதிய மேம்பாட்டு வங்கி இந்த அமைப்புடன் தொடர்புடையது
அ) பிரிக்ஸ் ஆ) டபிள்யூ.டி.ஓ இ) சார்க் ஈ) ஆசியான்

15) ஆடம் ஸ்மித்தால் கூறப்படாத புனித வரிவிதிப்பு விதி எது?
அ) சமத்துவம் விதி ஆ) நிச்சயதன்மை விதி
இ) வசதி விதி ஈ) எளிமை விதி

16) மின்னனு கழிவுகள் ______ என்று பொதுவாக குறிப்பிடப்படுகின்றன
அ) திடக்கழிவுகள் ஆ) குப்பைக் கழிவுகள்
இ) இ-கழிவுகள் ஈ) மருத்துவமனைக் கழிவுகள்

17) பொருளாதார வளர்ச்சி ______ ஐ அளவிடுகிறது
அ) உற்பத்தித் திறன் வளர்ச்சி ஆ) பெயரளவு வருமான அதிகரிப்பு
இ) உற்பத்தி அதிகரிப்பு ஈ) இவை ஏதுமில்லை

18) சர்வோதாயாத் திட்டத்தை முன்மொழிந்தவர் யார்?
அ) மஹாத்மா காந்தி ஆ) ஜெயப்பிரகாஷ் நாராயணன்
இ) எஸ்.என். அகர்வால் ஈ) எம்.என்.ராய்

19) ஸ்டாட்டிஸ்டிக்ஸ் (Statistics) என்ற வார்த்தை ______ ஆகும்
அ)ஒருமை ஆ) பன்மை
இ) ஒருமை மற்றும் பன்மை ஈ).மேற்சொன்ன ஏதுமில்லை

20) முதலாளித்துவத்தை பின்பற்றும் நாடு ______ ஆகும்
அ) ரஷ்யா ஆ) அமெரிக்கா இ) இந்தியா ஈ) சீனா

பகுதி - 2

II.ஏதேனும் ஏழு வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளி
(வினா எண். 30 கட்டாயம்) **7×2=14**

21) பேரியல் பொருளியலின் இலக்கணம் தருக.

22) GDP குறைப்பான் இலக்கணம் தருக.

Scanned with CamScanner

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

23) விளைவுத் தேவை என்றால் என்ன?

24) இறுதிநிலை நுகர்வு நாட்டம் (MPC) - வரையறு.

25) வாணிபச் செலுத்துநிலை பற்றி நீவிர் அறிவது யாது?

26) ஐ.பி.ஆர்.டி.யின் ஏதேனும் இரண்டு கடன் திட்டங்களின் பெயர்களை சுட்டிக்காட்டுக.

27) தலா கரியமலவாயு அதிகமாக வெளியேறும் நாடுகள் யாவை?

28) பொருளாதார முன்னேற்றத்தின் சமூக குறியீடுகளை பட்டியலிடுக.

29) புள்ளியியலின் வகைகள் யாவை?

30) தேக்க வீக்கம் என்றால் என்ன?

பிரிவு - 3

III. ஏதேனும் ஏழு வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடையளிக்க (வினா எண். 40 கட்டாயம்) **7×3=21**

31) தேசிய வருவாயின் பயன்களைப் பட்டியலிடுக.

32) கீழ்கண்டவற்றை சுருக்கமாக விவரி.

அ) பருவகால வேலையின்மை

ஆ) உடன்பாடில்லா வேலையின்மை

இ) படித்தவர் வேலையின்மை

33) முடுக்கிக்கும் பெருக்கிக்கும் உள்ள வேறுபாடுகளை விளக்குக.

34) பண அளிப்பினை தீர்மானிக்கும் காரணிகள் யாவை?

35) வாணிபக் கொடுப்பல் நிலைக்கும் அயல்நாட்டுச் செலுத்து நிலைக்குயிடையிலான ஏதேனும் மூன்று வேறுபாடுகளை பட்டியலிடுக.

36) வரி விதிப்பு விதிகளை விவரிக்க

37) நீர் மாசுக்கான காரணங்கள் யாவை?

38) வறுமையின் நச்சு சுழற்சிக்கான காரணங்களை வரைபடத்துடன் தெளிவுப்படுத்துக.

39) பொருளாதார அளவையியலின் நோக்கங்களை கூறுக.

40) சார்க்கின் பணிகளை சுருக்கமாக கூறுக.

பகுதி - 4

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி **7×5=35**

41) அ) முதலாளித்துவம், சமத்துவம், கலப்புத்துவம் இவற்றின் தன்மைகளை ஒப்பிடுக.

(அல்லது)

ஆ) பொருளாதார முன்னேற்றம் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீட்டிற்கும் இடையே உள்ள தொடர்பினை விளக்குக.

42) அ) பொருளாதார ஆய்வில் சமூகக் கணக்கிடுதலின் அவசியத்தை விவாதி

(அல்லது)

ஆ) உலக வங்கியின் பணிகளை வெளிக் கொணர்க.

43) அ) தொன்மைக் கோட்பாடு மற்றும் கீன்ஸ் கோட்பாடு ஆகியவற்றிற்கு இடையிலான வேறுபாடுகளை விளக்குக.

(அல்லது)

ஆ) கடன் திரும்பச் செலுத்தும் முறைகளை விளக்குக.

Scanned with CamScanner

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

44) அ) கீன்ஸின் நுகர்வுச் சார்பின் உளவியல் விதியினை வரைபடம் மூலம் விளக்குக.
(அல்லது)

ஆ) அரசுச் செலவு அதிகரிப்புகளுக்கான காரணங்கள் யாவை?

45) அ) இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகளை விளக்குக.
(அல்லது)

ஆ) நீடித்த அல்லது வளம் குன்றா வளர்ச்சி முக்கியத்துவம் மற்றும் அதன் நோக்கங்களை விளக்குக.

46) அ) நாட்டின் பொருளாதார மேம்பாட்டில் வணிக வங்கிகளின் பங்கினை விளக்குக.
(அல்லது)

ஆ) பல்வேறு வகையானத் திட்டமிடல் வகைகளை விவரி.

47) அ) ஒரு பொருளாதாரத்தில் பணவீக்கத்திற்கான காரணங்கள் மற்றும் விளைவுகள் யாவை?
(அல்லது)

ஆ) பின்வரும் விவரங்களுக்கு கார்ல் பியர்ஸனின் ஒட்டுறவுக் கெழுவினை கண்டறிக.

தேவை	X :	23	27	28	29	30	31	33	35	36	39
விற்பனை	Y :	18	22	23	24	25	26	28	29	30	32

****

Scanned with CamScanner